[1975 அக்டோபர் 31

(2) வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Stadium at Coimbatore.

*1 *S.N.Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the stadium built in Coimbatore town at a cost of several lakhs is being demolished under orders of the Special Officer of the Coimbatore Municipality; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) அங்கு ஒரு மேடை இருக்கிறது. அந்த மேடை மிகவும் பழையதாக இருப்பதாலும் நெடுங்காலமாக உபயோகத்தில் இல்லாததாலும் அதை இடித்துவிட்டு நவீன வசதியுடன் கூடிய புதியதொரு கட்டடத்தைக் கட்டலாம் என்று 30—6—1975 இல் முன்னாள் கோவை நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்த சிதம்பரம் பூங்கா ஒரு சரித்திரப் பிரசித்தி பெற்றதாகவும், ஏற்கெனவே அங்கே தேசியத் தலைவரைப் பாராட்டக்கூடிய ஒரு நினைவாலயமாகவும் இருந்து, பல கூட்டங்களெல்லாம் அந்த மேடையிலே நடக்கின்றன. அந்த மேடையைப் பொறுத்து எந்தவிதமான தகராறும் இல்லாதிருக்கும்போது, மேடை எந்த வேளையில் இடிந்துவிடுமோ என்ற நிலைமை இல்லாதபோது, அந்த மேடையை அழிக்க வேண்டியதை முதல் வேலையாக ஸ்பெஷல் ஆபீசர் எடுத்துக் கொண்டதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மேடை காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் நினைவாகக் கட்டப் பட்டுள்ளது. ஆனால், இந்த மேடையை இடித்துவிட்டு வேறொரு நல்ல அரங்கமாக, அதே நினைவினையொட்டி கட்டலாம் என்பது நகராட்சியினுடைய தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. அவர்கள், தனி அதிகாரி முதல் வேலையாக

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1975 அக்டோபர் 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. நா. கணபதி** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. கே. திருப்பதி மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீத்தார் நினைவுக் குறிப்பு.

1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. கே. திருப்பதி அவர்கள் 25—10—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

[1975 அக்டோபர் 31]

பள்ளிக் கல்வி இயக்குநரின் தலைமையில் ஒரு போர்டும், தேர்வு இயக்குநரின்கீழ் ஒரு போர்டும் வைக்கவேண்டும் என்ற கருத்துரு ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த செகண்டரி கல்வி போர்ட் எவ்வளவு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப் படுகிறது? இதற்கு முன்பு எப்போது நிறுவப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: செகண்டரி கல்வி போர்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக் கப்படுகிறது. அரசாங்கத்தின் சார்பாக எக்ஸ் அபிஷியோ உறுப் பினரும், யூனிவர்ஸிட்டி ரெப்ரசென்டேட்டிவ்ஸ் நான்குபேர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதி, மதுரை பல்கலைக் கழகத்தின் பிரதிநிதிகளும், அது தவிர ஆசிரியர்கள் சார்பாக இரண்டு பிரதிநிதிகளும், மானேஜ்மென்ட் சார்பாக இரண்டு பிரதிநிதிகளும், டெக்னிக்கல் எட்யூகேஷன் சார்பாக இரண்டு பிரிதிநிதிகளும், ஹரிஜன ரெப்ரசென்டேட்டிவ்ஸ் என்ற முறையில் இரண்டு பேர்களும், இப்படி பல்வேறு பிரிவினர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

திரு. கு. காமாட்சி: முதல் வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரை இந்த செகண்டரி கல்வி போர்ட் நிர்வகிக்க வேண்டி யிருக்கிறது. ஆகவே, நிர்வாக வசதிக்காக ஆரம்பக் கல்வியைத் தனியாகவும், ஐந்தாவது வகுப்பிலிருந்து பதினோராவது வகுப்பு வரை செகண்டரி கல்வி என்றும் செய்வதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தப் பிரச்னை இந்த மன்றத்தில் பலதடவைகள் எழுப்பப்பட்டு அதற்கு பதிலும் கூறப்பட்டிருக்கிறது. கல்வியைப் பொறுத்தவரையில் அதை நிர்வகிக்கும் அதிகாரிகள், மாவட்டக் கல்வி அதிகாரி, மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி இவர்களின் கீழ் நிர்வாகம் நடை பெறுகிறது.

உயர்துவக்கப் பள்ளி ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி ஆறு முதல் பதினோராவது வகுப்பு வரை இருக்கிறது. ஆறு முதல் எட்டு வரை உயர் துவக்கப் பள்ளிகளிலும் இருக்கின்றது. உயர்நிலைப் பள்ளிகளிலும் இருக் கின்றது. இவை ஒன்றோடொன்று தொடர்புடையதாக

இருப்பதால் துணை இயக்குநர் அளவில் தனித்தனியாக கவனிக்கப் பட்டு ஆனால் இயக்குநர் ஒருவர் மேற்பார்வையில் நிர்வகிக்கும் அளவிற்கு இருக்கிறது. ஆரம்பக் கல்விக்கு தனி இயக்குநராகப் பிரித்து தொழில் கல்விக்கு இருப்பதுபோல் வைப்பது கடின மானது. ஒரு இயக்குநரின் கீழ் தனித்தனியாக இணை இயக்கு நர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

செட்டியார் மடம் உயர்தொடக்கப்பள்ளிக் கட்டடம்.

* 147 வினா—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த செட்டியார் மடம் உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில் புதிதாக கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பழுதுபட்ட பகுதியை சிறப்புப்பணி பார்க்க நாகர்கோவில் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ஏ. பாலையா : செட்டியார் மடம் உயர்தொடக்கப் பள்ளிக் கட்டடம் மோசமான நிலையில், மேற்கூரை பழுதுபட்டு, அனைத்தும் அழிபட்டு மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாலும், மதிய உணவுக்கு வேண்டிய பொருள்களை அந்தப் பள்ளியில் வைப்பதற்கு பாதுகாப்பான இடவசதி இல்லாத தாலும் அந்தப் பள்ளிக் கட்டடத்தை உடனடியாகக் கட்டி முடித்துக்கொடுக்க அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருநெல்வேலியில் உள்ள நிர்வாகப் பொறியாளருக்கு இதைப் பற்றி உடனடியாகக் கவனிக்குமாறு மாவட்டக் கல்வி அதிகாரி வற்புறுத்தி எழுதி யிருக்கிறார்கள். நிர்வாகப் பொறியாளர் விரைவில் அதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கூறி இருக்கிறார்கள்.